**வாசிக்க**: **எசேக்கியல்** 47:1-12

**ஜீவநதி பாய்கிற வழியெல்லாம் ஜீவன் பெறசெய்கிறது**.

பின்பு தேவதூதன் எசேக்கியல் தீர்க்கதரிசியை ஆலயத்திற்கு அழைத்து சென்று பலிபீடத்திலிருந்து வடக்கு வாசல்வழியாக கீழ்திசையில் தெற்கு நோக்கி பாய்கிற தண்ணீர் வாய்க்காலை காண்பித்தார். அங்கிருந்து ஆயிரம் முழத்தொலைவில் கணுக்காலளவு தண்ணீர் பெருகியிருந்தது. மற்ற ஆயிரம் மூழத் தொலைவில் முழங்காலளவு தண்ணீர் இருந்தது. மறுபடியும் ஆயிரம் முழத் தொலைவில் இடுப்பளவு தண்ணீர் பெருகியிருந்தது. பின்னர் ஆயிரம் முழத்தொலைவு சென்றபோது அது நடக்கவும், கடக்கவும் முடியாத அளவிற்கு பெருகி நீச்சல் ஆழமான பெரிய நதியாகியிருந்தது. அந்த நதி இறுதியில் போய் சவக்கடலில் கலந்தது. சவக்கடலில் ஆலயத்திலிருந்து புறப்பட்ட நதி விழுகிற இடத்தில் அதுவரை உயிர்வாழமுடியாத ஜீவன்கள் (மச்சங்கள்) அப்போது உண்டானது. நதி போகும் பாதையில் கனிகளுள்ள மரங்கள் வளர்ந்து அதின் கனிகள் உணவாகவும், இலைகளெல்லாம் மருத்துவ மூலிகைகளானது. பிரயோஜனமாக மாறியது.

**கேள்வி**:

ஒன்றும் புரியவில்லை. ஆலயத்திலிருந்து வந்த தண்ணீர் வாய்க்கால் எப்படி நதியானது..? நதியை விட பெரிய கடலில் விழுந்து கடலை எப்படி சுத்திகரித்து, ஜீவபிராணிகளை உருவாக்க வைத்தது..? இதன் அர்த்தம் தான் என்ன.?

**பதில்**:

நேற்று சொன்னபடியே இந்த தரிசனங்கள் எல்லாவற்றையும் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்திலேயே நாம் தியானிக்க வேண்டும். 1கொரிந்தியர் 3:16ன்படி நாம் தான் ஆலயம், நம் இருதயமே பலிபீடம். சாதாரணமாக பெரிய நதி ஓடும்போது குறுகி சிறியதாகி பின் கடலில் கலக்கும். ஆனால் இங்கே ஆரம்பத்தில் சிறியதாக இருந்த வாய்க்கால் போக போக பெரிதாகி நதியாகிறது. யோவான் 7:38ல் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவனிடத்திலிருந்து ஜீவ நதி ஓடும் என்றபடியே நம் இருதயத்தில் இருந்து புறப்படுகிற ஜீவநதி இரட்சிக்கபடாத ஆவியில் மரித்த ஜனங்களை உயிர்பித்து, அநேகருக்கு மகிழ்ச்சி தரும் கனியையும், குணமாக்கும் இலைகளையும் தோன்ற பண்ணும். எனக்கு அருமையான தேவபிள்ளைகளே உன் விசுவாசத்தில் (ஆயிரம் முழம் கடக்க) வளரும்போது உனக்குள் இருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வதங்கள் பெருகி, பெருகி மற்றவர்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக மாற்றும். நாளையிலிருத்து தானியேல் புத்தகத்தை தியானிக்க போகிறோம்.

வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் (இயேசுகிறிஸ்து) விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். யோவான் 7 :38

**ஜெபம்**

பரிசுத்த பிதாவே! தேவன் ஜீவனோடு இருக்கிறார். இயேசுக்கிறிஸ்துவே மெய்யான தேவன் என்று விசுவாசித்து. அவர் பிள்ளையாய் நிலைத்து நிற்போம். ஆமென்